DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

SINGAMPUNARI

C.C. No. 20 /2025 PW .1

பெயர்	**: கருப்பாயி**	**கணவர் பெயர்:**	**ஆண்டிச்சாமி**
ஊர்	**:**	**தாலுகா**	**:**
வயது	**:**	**தொழில்**	**:**
ஜாதி	**:**	**சமயம்**	**: இந்து**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2026

(1,2 எதிரிகள் ஆஜர்)

29.01.2026 முதல் விசாரணை:

1. நான் சிங்கம்புணரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சியான அஜீத் என்பவர் எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகள் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் ஆவார்கள். வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்பு எனது மகன் அஜீத் அவர்களை எதிரிகள் கத்தியால் குத்தி காயம் ஏற்படுத்தியதாகவும், அவரை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தகவல் தெரிந்து நான் அங்கு சென்று பார்த்தேன்.

2. என் மகனுக்கு உடலில் முதுகு, இடுப்பு ஆகிய இடங்களில் குத்து காயங்கள் ஏற்பட்டிருந்தது. மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பெற்றார்கள். எனக்கு படிப்பறிவு இல்லை என்பதால் நான் அதில் கைரேகை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் போலீசாரிடம் கொடுத்த புகார்வாக்குமூலம் ஆகும். அதிலுள்ள கைரேகை என்னுடையது தான். **(புகார்வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது மகன் 3 மாதங்கள் மதுரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றான். இதுகுறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: எதிரிகள் ஆஜர்., எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை